# யுத்தநிறுத்த மீறல், தமிழர் படுகொலைகள் பற்றி பார்த்தசாரதி, பண்டாரியிடம் கூட்டணி புகார்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 4 12-85 புதன் (கார்த்திகை 19 ரபியு அவ் 21) முழக்கம் 199

(புதுடில்லி)

"இலங்கை இனப்பிரச்சினை குறித்து அந்நாட்டு அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்குவது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி இன்னமும் முடிவு எதனையும் எடுக்கவில்லை' என்று மேற்படிக் கூட்டணியின் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் வெளியுறவுச் செயலர் திரு ரமேஷ் பண்டாரியுடன் நடத்திய ஒரு மணித்தியாலச் சந்திப்பின் பின்பே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார். இச்சந்திப்பின்போது அவருடன் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரமும், திரு. இரா.சம்பந்தனும் சமுகமளித்திருந்தனர். இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் கொலை செய்யப்படுவது குறித்தும், போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக மீறப்பட்டுள்ளது குறித்தும், கண்காணிப்புக்குழு பயனற்றுப் போயிருப்பது குறித்தும் திரு. பண்டாரியிடம் அவர்கள் எடுத்துரைத்ததாகவும் இனப் படுகொலைகளை உடன் நிறுத்த பாரத அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. தம் நிலைபற்றி கூட்டணியினர் திரு. பண்டாரியிடம் முழு விபரங்களுடன்

—6ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் கண்ணிவெடி 5 ராணுவம் பலி

(திருமலை)

திருமலையிலுள்ள தெஹிவத்தை என்ற இடத்தில் நேற்றுக் காலை ஏழேமுக்கால் மணியளவில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடி விபத்தொன்றில் நான்கு சிப்பாய்களும் ஒரு சாரதியுமாக மொத்தம் ஐந்து ராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியானார்கள் பொது மக்களில் ஒருவரும் இதில் மரணமானார். படுகாயமுற்ற மேலும் மூன்று ராணுவத்தினர் அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர். இச் சம்பவத்தையடுத்து கடைகள் பூட்டப்பட்டு, அலுவலகங்கள் மூடப்பட்டு திருமலை முழுவதும் பெரும் பதற்றம் உருவானது. அன்புவழிபுரம், திருமலை நகர், கந்தளாய் பகுதிகளில் சூட்டுச் சத்தங்களும், குண்டு வெடிப்புகளும் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமிருந்தது.

★ ராணுவம் பஸ்களில் பயணிகளுடன் சென்று நடத்திய

# பளை முற்றுகையில் 40 இளைஞர் கைது!

## சூட்டுக்கு ஒருவர் பலி; கருணாநிதி காயம்

(இ. பாரதி, பி, கிறிஸ்ரி ரஞ்சன்)

போக்குவரத்துச் சபை பஸ்ஸிலும், மினி பஸ்ஸிலும் பயணிகளுடன் சேர்ந்து சாதாரண உடையில் சென்ற ராணுவத்தினர் பளைப் பகுதியில் நேற்றுக் காலை நடத்திய முற்றுகையின்போது சுமார் நாற்பது இளைஞர்கள் கைதாகினர், ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். கருணாநிதி என்ற இளைஞர் சூட்டுக்காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனையிறவிலிருந்து சென்ற ராணுவத்தினரே திடீரென பளையைச் சுற்றிவளைத்து, கைதான இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் ஆனையிறவுக்குச் சென்றனர். இதனால் நேற்று நண்பகல்வரை பளையூடான சகல பஸ் சேவைகளும் தடைப்பட்டிருந்தன.

ராணுவத்தினரைக் கண்டதும் பொது மக்கள் அச்சம் காரணமாக ஓட முற்பட்ட போது தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப் பட்டனவாம்.

இச் சம்பவத்தில் காயமடைந்த எஸ். கருணாநிதி (22) என்ற இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மாலை கொண்டுவரப்பட்டு அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இவர் 'ஈழமுரசு'க்குத் தகவல் தெரிவிக்கையில், காலை 10.30 மணியளவில் தானும் தனது தம்பியும் பளை தபால் நிலையத்தின் முன்னால், நின்று

—6ஆம் பக்கம் பார்க்க

## குச்சவெளிக் காட்டில் சூடுபட்ட ஹெலிகப்டரின் சிறகு சேதம்!

(திருமலை)

குச்சவெளிக்கும் புல்மோட்டைக்குமிடையே சேவையிலீடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரின் ஹெலிகப்டரொன்றுதுப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக அறிவிக்கப்பட்டுளது.

இங்குள்ள காட்டுப் பகுதியில் தாழப்பறந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே சுடப்பட்டதாம். இதனால் ஹெலிகப்டரின் ஒரு பகுதிச் சிறகு சேதமானதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அருகிலுள்ள வெளிப் பிரதேசமொன்றில் ஹெலிகப்டர் இறக்கப்பட்டது. பாதுகாப்புப் படையினர் பின்னர் காட்டுப் பகுதியில் துப்பாக்கி பிரயோகங்களை மேற்கொண்ட போதிலும் எவருக்கும் காயமேற்படவில்லை. எவரும் கைதாகவுமில்லை.

### நாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை நடத்தும் நாவலர் குருபூஜை நிகழ்ச்சிகள், இன்று நகரின் ஐந்து இடங்களில் நடைபெறுகின்றது. விபரங்களை

நான்காம் பக்கம் பார்க்க.

★ பொங்கல் முதல் சித்திரை வரை

## தோட்டத் தொழிலாளர்கள் பகல் 12 மணி வரைக்கும் வேலை செய்யமாட்டார்கள்

### இ. தொ. கா. நேற்று எடுத்த முடிவு

(கொழும்பு)

மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையுட்பட தீர்க்கப்படாதிருக்கும் பல்வேறு தேவைகளையும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் புதுவகையான போராட்டமொன்றை தைப் பொங்கல் தினத்தன்று ஆரம்பிப்பதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று முடிவெடுத்தது.

முதற்கட்ட நடவடிக்கையாக பொங்கல் முதல் சித்திரைப் புத்தாண்டு வரையான மூன்று மாதமும் நண்பகல் பன்னிரண்டு மணிவரை தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்யமாட்டார்கள்.

அதற்குப்பதிலாக தமது உரிமையை வேண்டி பிரார்த்தனை நிகழ்ச்சிகளிலும், வேறுபல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்கள் என்று காங்கிரஸ் தலைவர் அமைச்சர் எஸ். தொண்டமான் 'ஈழமுரசு'க்

...6ம் பக்கம் பார்க்க

### ஒலிபெருக்கியில் அஞ்சலி உரை

(குருநகர்)

நேற்றுப் பிற்பகல் குருநகர் பிரதான சந்திகளில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட

...6ம் பக்கம் பார்க்க

உமா மகேஸ்வரன் குற்றச்சாட்டு:

## ராணுவ நடவடிக்கைகளையே ஜே. ஆர். எடுத்து வருகின்றார்

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய சாதகமான நிலை உருவாகும்வரை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் பயனில்லை" என்று 'புளொட்' தலைவர் திரு. உமா மகேஸ்வரன் சென்னையில் பி.ரி.ஐ. நிருபருக்கு அளித்தபேட்டியில் கூறியிருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா ராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் எனச் சுட்டிக்காட்டிய அவர் 'இந்நிலையில் பேச்சுவார்த்தை நடத்

... 6ஆம் பக்கம் பார்க்க

## சுடப்பட்ட இளைஞர் ஓட்டம்; வேறு மூவர் பிடிபட்டனர்!

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை நோக்கி அவ்வழியால் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது இளைஞர்கள் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுவிட்டு தப்பியோடி விட்டனர்.

இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிக் கொண்டு சென்றனர். அதே வேளை அவ்வழியால் வந்த மூன்று அப்பாவி நபர்களையும் இராணுவம் கைதுசெய்து கொண்டு சென்றதாக அவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை பிரஜைகள் குழுவுக்கு புகார் செய்துள்ளனர்.

தமிழ் விண்ணப்பதாரிகளிடம்

## கூட்டுறவுப் பரிசோதகர் தெரிவில் கேட்ட கேள்விகள்

கூட்டுறவு பரிசோதகர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் பயங்கரவாதம், தனி நாடு, இனப்பிரச்சனை பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டனவாம்.

கடந்த வாரம் கொழும்பில் இதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றபொழுது அதில் தோற்றிய தமிழ் விண்ணப்பதாரிகளிடம் அந்த நேர்முகப் பரீட்சை நடாத்தியவர்களால் கேட்கப்பட்டனவாம்.

பயங்கரவாதம் பற்றி உமது

- 6ம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## சிறு விளம்பரம்

### தேவை
**சீமாட்டி பாம்ஸ்**

கோழி பராமரிப்பதிலும், தோட்ட வேலையிலும் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். சீமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## தமிழ்ச்சிறுர் நலன்கருதி...

(வேலணை)

தமிழ்ச்சிறுர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருதி தமிழ்ப்பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு பாலர் பாடசாலையை திறந்து நடாத்துவதென அறவழிப் போராட்ட குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

அறவழிப் போராட்டக் குழுவின் கல்வி சம்பந்தமான விடயங்களுக்குப் பொறுப்பாக விருக்கும் திரு. துரைராசா இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகின்றுர்.

இச்சிறுவர் பாடசாலை மூலம் வறிய தமிழ் சிறுர்கள் அதிக நன்மையடைவார்கள் எனத் தெரியவருகிறது.

## ஆலய விக்கிரகம் திருட்டு

(நீர்வேலி)

நீர்வேலி முழக்கப்பிட்டி நாச்சிமார் ஆலயத்தில் ஆதிகாலம் தொட்டு இருந்து வந்த தங்க விக்கிரகம் ஒன்று களவாடப் பட்டுள்ளது.

ஆலயத்தில் பக்தர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று இவ்விக்கிரகத்தை கண்டதாகவும், பின் மீண்டும் செவ்வாய்க்கிழமை சென்றபோது இது கோவிலில் காணப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

ஜன நடமாட்டம் அற்ற சூழலில் இந்த ஆலயம் இருப்பதால் விக்கிரகம் எப்போது களவாடப்பட்டது எனச் சரியாகக் கூறமுடியாது எனவும் இதற்கு முன்பும் பலமுறை சிறுகொள்ளைகள் நடைபெற்று வந்தது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இவ் விக்கிரகத்தை அபகரித்தவர்கள் கருணை கூர்ந்து விக்கிரகத்தை திரும்பவும் ஆலயத்தில் ஒப்படைக்குமாறு ஆலய பக்தர்கள் பணிவான வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கடின உழைப்பு களிப்புமிகுந்த வாழ்வு பெற வழிவகுக்கும்

(சுழிபுரம்)

கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியின் தேசிய தொழிற் கற்கைகளிலான தராதரப் பத்திரம் நெறிபயிலும் மாணவர்களின் புதியமாணவர் வரவேற்பு வைபவம் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கல்லூரி உபஅதிபர் திரு. வே. இ. பாக்கியநாதன் கலந்து கொண்டார். அவர் தமது உரையில்: "புதிய மாணவர்கள் சங்கோஜமின்றிப் பழகவும் 'ருக்கிங்' என்றபேர்வையில் நடைபெறும் சீர்கேடுகளை தவிர்க்கவும் இத்தகைய வரவேற்புகள் வழிகோலுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்கின்ற மாணவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து செயற்பட வேண்டும். நிறுவனத்தின் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் உழைக்க வேண்டும். என்றுர்.

வணிகத்துறைத் தலைவர் திரு. ஏ. இரத்தினம் பேசுகையில்: "மாணவர்கள் ஒழுக்கத்தைப் பேணி நடக்கவேண்டும். கடினஉழைப்பே மனிதனை உயர்த்தும். ஆகவே மாணவர்கள் உழைப்பையும், ஒழுக்கத்தையும் தம் இரு கண்ணென மதிக்க வேண்டும்" என்றுர். விரிவுரையாளர் கே. ஜெயரத்தினமும் உரையாற்றினுர்.

## இன்று கௌரவம்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த பதினுன்கு ஆண்டுகளாகச் சிறப்பான சேவையாற்றி, இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. நவரெத்தினத்துக்கு இன்று மதிய போசன விருந்தொன்றை அளித்துக் கௌரவிக்கிறது கல்லூரி ஆசிரியர் சங்கம். ஆசிரியர் திரு. வி, நவரெத்தினம் ஒரு வர்த்தகப் பட்டதாரி என்பதும், மேற்படி கல்லூரியில் வர்த்தகப் பிரிவைத் தொடக்கியதோடு அதன் உன்னதமான வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது,

## 144 பேர் தெரிவாகினர்

(சாவகச்சேரி)

பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு வருடமான 1985ம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அதிகாரச் சபையினுல் சாவகச்சேரி நகர சபைக்கு ஒதுக்கப்பட்ட வீடமைப்புக் கடனுக்காக மனுச் செய்தவர்களில் முதற்கட்டமாக 50 பேர் தெரிவு செய்யப் பட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து இப்பொழுது இரண்டாம் கட்டக் கடன் கொடுப்பனவுக்காக 144 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த மனுதாரருக்கு வீடமைப்புக் கடனுக தலா 15000/-ரூபா வழங்கப்படும்.

## கடன் பணம் கிடைக்கவில்லை

(காரைநகர்)

வடபகுதியிலிருந்துவீடமைப்மைப்புக் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பலருக்கு வீடமைப்புக்கான கடன்பணம் இதுவரை வழங்கப்படவில்லை. 1985 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர்கொடுப்பனவுகள் எதுவும்செய்யப்படாததற்சான காரணத்தை அறிவிக்குமாறு காரைநகர் மேற்கு வீடமைப்பு உபகுழு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஊடாக பிரதேச வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

## இன்றைய நிகழ்ச்சி

(காரைநகர்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த நத்தார் ஒளிவிழா இன்று புதன்கிழமை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட் திரு டி. யே. அம்பலவாணர் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேவாசீர்வாதம் வழங்குவார்.

## வறியோர்க்கு அன்பளிப்பு

(சுண்டுக்குளி)

நந்தார்க் கொண்டாட்டத்தை முன்னிட்டுச் சாவகச்சேரி வைஸ்மன் கழகம் 175 வறிய குடும்பங்களுக்குப் புத்தாடைகளும், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக வைஸ்மன் கழகத் தலைவர் திரு. ஏ. ஆர். ராஜு அறிவித்துள்ளளார்.

பொது மக்களிடமிருந்து இந்த அன்பளிப்புப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## திருப்பணி ஆரம்பம்

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை கிழக்கு சட்டம் பிப்பதி அருள்மிகு விசாகப் பெருமான் ஆலயத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாலய நிர்மாண திருப்பணி வேலைகளுக்கெனப் பொது மக்களிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

## பதவியுயர்வு

(சரசாலை)

மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் கடந்த நான்கு வருடங்களாக உதவி முகாமையாளராக கடமையாற்றிய திரு. வே. ஸ்ரீஸ்கந்தவேல் இம்மாதம் முதல் மாவட்ட முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று மன்னர் மாவட்டத்திற்கு பொறுப்பாக நியமனம் பெற்றுள்ளார்.



## பிறந்தநாள் வாழ்த்து

⌘ அரியாலை. அரசகேசரி இராதாமணி தம்பதியின் மகன் கோகுலராகன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ கொழும்புத்துறை துண்டி வீதி, இராஜலிங்கம் பிறேமருணி தம்பதியின் மகன் ரேய் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றுர்.

⌘ யாழ். நாவலர் வீதி, முபாரக் சித்தி தம்பதியின் மகள் சுபியானு இன்று நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்,

⌘ வல்வெட்டி, சிவபாதசுந்தரம் முத்துலட்சுமி தம்பதியின் மகள் ருகிணி இன்று நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றுர்.

⌘ மிருசுவில், ஜெயசிங்கம் ருஜினி தம்பதியின் மகன் அல்வின் ஜெகான் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ கோப்பாய் வடக்கு, நவரத்தினம் அன்னப்பிள்ளை தம்பதியின் மகள் அன்பரசி இன்று பதினேராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ கரணவாய் தெற்கு, கந்தசாமி யோகேஸ்வரி தம்பதியின் மகன் ஜெயரூபன் இன்று பதினுன்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றுர்.

## இலவச பாலர் வகுப்பு

(நீர்வேலி)

நீர்வேலி பன்னுலை வழிகாட்டிகள் சனசமூகநிலைய நிர்வாகிகள் நிலைய மண்டபத்தில் இலவச பாலர் வகுப்பு ஒன்றை ஆரம்பித்துச் சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

இந்த இலவச வகுப்பு ஆரம்பிக்கப் பட்டதன் முக்கிய நோக்கம் கல்வி கற்க வசதியற்ற, மிகவும் வறுமையில் வாடும் பிள்ளைகளையும் கல்வி கற்க வைப்பதேயாகும் என சனசமூக நிலைய தலைவர் திரு. மு. வரதராஜன் தெரிவிக்கின்றுர்.

## விரைவான திருத்தவேலை,

(ஒட்டுசுட்டான்)

பெருமழையினுல் போக்குவரத்துச் செய்ய முடியாமல் பழுதடைந்த, ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் வரை ஒட்டுசுட்டானிலிருந்து புளியம்குளம் வரையும் முல்லைத்தீவிலிருந்து உடையார் கட்டு வரையுமுள்ள வீதிகள் வேகமாகத் திருத்தப்பட்டு வருகின்றன.

## ஸ்தல பலி

(ஒட்டுசுட்டான்)

கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் ஆனையிறவு உப்பளத்தில் வேலை செய்யும் வேலுப்பிள்ளை என்பவர் உப்பளத்திலிருந்து சைக்கிளில் பிரதானவீதியைக் கடக்கும் சமயம் யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினி பஸ் மோதியதால் ஸ்தலத்திலேயே மரணமாஞர்.

## ராணுவத்திற்கு உணவு எரிபொருள்

(ஒட்டுசுட்டான்)

கடந்த செவ்வாய்க்கிழமை மாங்குளத்திலுள்ள பாதுகாப்புப் படையினருக்கு கொழும்பிலிருந்து பறலில் எரி பொருளும், உணவுப் பொருட்களும் மாங்குளம் புகையிரத நிலையத்துக்கு வந்தன. அப்பொருட்களை ஏற்றிவருவதற்கு தமது வாகனங்களை பாதுகாப்புப் படையில் ஒரு பகுதியினர்யாங்குளம் புகையிரத நிலையத்துக்குக் கொண்டு செல்ல மற்றப் பகுதியினர் மாங்குளம் சந்தியிலிருந்து புகையிரத நிலையம் வரை காவல் நின்றனர்.

அச்சமயம் அவ்வீதியால் வந்த வாகனங்களைச் சோதனையுமிட்டனர். இதனுல் மக்கள் பதற்றம் அடைந்து கடைகளுக்குள் நின்றனர். இரண்டு மணித்தியாலமாக இந்த வேலை முடிந்ததும் அப்பகுதி பழைய நிலைமைக்குத் திரும்பியது.

## இணக்கசபை

(அரியாலை)

அரியாலை கலைமகள் வட்டாரத்தில் இணக்கசபை ஒன்றை அமைக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. விரைவில் இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## பாராட்டு

(சரசாலை)

மட்டுவில் வடக்கு அம்பாள் சனசமூக நிலையத்தினர் ஓர் பாதுகாப்புக் குழுவை நடத்துகின்றனர். கொள்ளைகள், களவுகள் தவிர்ப்பதற்காகச் செயல்படுவதோடு, கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையிலும் இக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். மேற்படி சனசமூக நிலையத்தினரின் பணியை பலரும் பாராட்டியுள்ளனர்.


## வெளிநாட்டுப் பிரயாணம்

**பாரின்**

எலெற்றிசியன்ஸ்
காப்பென்ரேர்ஸ்
மேசன்கள்
வெல்டர்கள்
பிளம்பர்கள்
கிறேன் ஒப்பறேற்றர்கள், (5 வருட அனுபவம்)
சிவில் எஞ்சினியர்கள், (10 வருட அனுபவம்)
கூலியாட்கள், (Hepers)

**சவூதி அரேபியா**

ஜெனரல் கிளினேர்ஸ்
எயர்பொட் கிளினேர்ஸ்

**குவைத்**

பெண்கள் (இன்டஸ்றியல் கிளினேர்ஸ்) Industrial Cleaners
பணிப் பெண்கள்

விரைவான பிரயாணத்திற்கு வெள்ளிக்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**கிருஷ்ணு ஏஜென்சி**
1/1, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.


## நினைவஞ்சலி

நீர்ப்பாசனத் திணைக்களத்தின்
முன்னுள் ஒட்டுசுட்டான் பிரதேச உதவியாளர்

### திரு. ச. தேவசிகாமணி அவர்களின்
முதல் வருட நினைவுத்திதி இன்று



"எந்தையே ஈசா உடலிடம் கலந்தாய்
யாம் இலம் இதற்கு ஓர் கைம்மாறே"
-திருவாசகம்-

நடராஜகோட்டம்
வல்வெட்டித்துறை

மனைவி, பிள்ளைகள்

# தென்னிலங்கை வளர்ச்சியடைந்துள்ளது; ஆனால் வட பகுதி ஆரம்ப நிலையில் உள்ளது

(சாவாகச்சேரி)

"சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய அமைப்பு வேலைகள் தென் இலங்கையில் வளர்ச்சியும், உயர்ச்சியும் அடைந்துள்ள வேளையில் வடக்கில் இப்பொழுதுதான் ஆரம்ப நிலையில் இருப்பது கவலைக்கிமானது. இது இப்பகுதி மக்களின் ஆர்வக் குறைவையே எடுத்துக் காட்டுகிறது."

இவ்வாறு சாவகச்சேரி நகர சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். செல்வபாஸ்கரநாயகம், சாவகச்சேரி 4ம் வட்டாரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார கண்காணிப்பு குழுவை அங்குரார்ப்பணம்செய்து வைத்துப்பேசுகையில்தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. ரீ. நவரத்தினராஜா, வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ், ஜே. பி. உட்பட ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்ட இவ் வைபவத்தில் திரு துரைநாயகம் தொடர்ந்து பேசுகையில், "ஆரம்ப சுகாதார நிலையங்கள் மக்களின் சுகாதார நலனுக்காகக் கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப்படுவன.

இதில் சேவைக்காகத் தெரிவு செய்யப்படும் தொண்டர்கள் தமது கிராமம், தமது மக்கள் நலன் பெற சிறந்த தொண்டுகளைச் செய்யக் காத்துள்ளனர் அவர்களுக்கு அதற்கான சகல பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கசம் சலரோகம், இரத்த அமுக்கம் கண்நோய் போன்ற ஆரம்ப அறிகுறிகளையும் அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று அறிந்து அறிவுரைகள் கூறுவார்கள். பல தனியார் மருத்துவ நிபுணர்களும் இலவசமாகத் தொண்டு செய்ய காத்திருக்கிறார்கள்" என்றார்.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. ரீ. நவரத்தினராஜா பேசுகையில், "நகரசபை இத்தொண்டிற்காக ஒரு கணிசமான தொகையை ஒதுக்கும். மக்களின் சுகாதார நலனுக்காக சத்துணவு போன்ற அம்சங்களுக்காக உதவ என்றும் தயாராக உள்ளது. மக்கள் நலனே சபையின்குறிக்கோள்" என்றார்.

வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ், ஜே பி. மக்கள் சுகாதார உதவியாளர் திருமதி நாகேஸ்வரி, அருமைத்துரை உட்பட பலர் பேசினர்.

ஈற்றில் இடம்பெற்ற ஆரம்ப சுகாதார கண்காணிப்புக் குழு உத்தியோகத்தர்கள் தேர்வில் தலைவராக திரு. சி. சிவானந்தனும், உப தலைவராக திரு செ. அருளம்பலமும் செயலாளராக திரு. எஸ், தருமலிங்கமும், உபசெயலாளராக திரு. க. சிவநேசனும், பொருளாளராக திரு. ஆர். பஞ்சாட்சரமும், 15 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிவில் நிர்வாகம் செயலற்றதால்

# மீசாலை விழிப்புக்குழுவின் சுய பாதுகாப்பு ஏற்பாடு

(கொடிகாமம்)

"எமது பிரதேசத்தில் சிவில் நிர்வாகம் செயலற்று இருக்கும் காரணத்தினால் சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவற்றினை கட்டுப்படுத்த சுய பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை ஆக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எம் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே புத்தூர்ச் சந்தியை மையமாகக் கொண்ட மீசாலை மக்கள் விழிப்புக் குழு என்ற அமைப் பொன்றினை நாம் அமைத்துள்ளோம். டிசம்பர் மாதம் 1ம் திகதி முதல் இரவு வேளையில் மீசாலைப் பகுதியில் வீதித் தடைகளைபோட்டு காவல் வேலையை ஆரம்பிக்க உள்ளோம்; இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்."

இவ்வாறு மீசாலை புத்தூர்ச் சந்தி விழிப்புக் குழுவால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பிரசுரத்தில், இவ் விழிப்புக் குழு செயற்படும் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளதோடு இப்பகுதியினுள் யாராவது சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடினால் அது பற்றி விழிப்புக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பெற்றா எசன்ஸ் சப்ளையேர்ஸ்

PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்
- குளுக்கோஸ்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்ட்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லாவித பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்

இன்றே எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து பாருங்கள்
223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
223, Power House Road, Jaffna.


## இருளில் நீர்வேலி

# புதிய மின்மாற்றி தருவிக்க மின்சாரசபை தீவிர முயற்சி

(நீர்வேலி)

யாழ். அபிவிருத்திச் சபை நீர்வேலி உப- அலுவலகத்திற்குச் சொந்தமான மின் வழங்கும் டிரான்ஸ்போமர் தற்போது எரிந்துவிட்டது. இதனால் கடந்த இரு நாட்களாக நீர்வேலியின் சகல பகுதிகளும் இருளில் மூழ்கியுள்ளன.

நீர்வேலி உப அலுவலக அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர் திரு. அ. துரைராஜா தலைமையிலான குழு ஒன்று சுன்னாகம் இலங்கை மின்சார சபை நிலையத்திற்கு சென்று மின்பொறியியலாளரிடம் இது பற்றி விளக்கியது.

அப்போது சுன்னாகம் மின்சார சபை மின்பொறியியலாளர், தற்போது தம்மிடம் டிரான்ஸ் போமர் கைவசம் இல்லை என்றும் புதிதாக கொழும்பில் இருந்து தான் எடுக்கமுடியும். இதில் சிரமங்கள் உள்ளதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு டிரான்ஸ் போமரை இருவாரத்திற்குள் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

மேலும் "நீர்வேலிப் பகுதி சட்ட விரோத மின்பாவனையாளர்களின் மனிதாபிமானம் அற்ற செயலே டிரான்ஸ் போமர் எரிந்தமைக்கு காரணம். ஆகவே இனியாவது புதிய டிரான்ஸ்போமர் பொருத்தப்பட்டால் அதையும் இவ்வாறு நாசமாக்கிவிடாது பாதுகாக்க சட்ட விரோத மின்சாரத்தை முற்றாக நீக்கி விடவேண்டும் எனத் தயவாகக் கேட்கிறேன்" என்றும் அவர் கூறினார்.

இந்த டிரான்ஸ் போமர் எரிந்தமையால் பல தொழிற்சாலைகள் தமது தொழிலை இடை நிறுத்தியுள்ளன. மற்றும் அன்றாடம்சம்பாதித்து தம் வயிறுவளர்க்கும் தொழிலாளர் கூட தொழில் மேற் கொள்ள முடியாதுள்ளது.

## மூளாய் கூட்டத்தில் பேச்சு

# மக்களைப் பாதுகாப்பது விடுதலை இயக்கங்கள் கடமை

(காரைநகர்)

"வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை விடுதலை இயக்கங்கள் குலைத்தமையால் தான் இன்று கொலை, கொள்ளை போன்ற வன் செயல்கள் நடைபெறுகின்றன. எனவே சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டி வன்செயல்கள் நடைபெறு வண்ணம் பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது விடுதலை இயக்கங்களின் கடமையாகும்."

இவ்வாறு மூளாய் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற ஆறு தியாகிகளின் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சட்டத்தரணி திரு. கே. விக்கினராசா குறிப்பிட்டார்.

அவர் தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது: "இன்று சில விடுதலை இயக்கங்கள் மத்தியில் அராஜகமும், அதிகார துஷ்பிரயோகமும் தாண்டவமாடுகின்றன. இந்நிலைமை தொடர்ந்து நீடிப்பதும் விடுதலை இயக்கங்களிடையே ஒற்றுமையின்மை நிலவுவதும் பொது மக்களையே பெரிதும் பாதிக்கும். மக்களுக்காக இயக்கங்கள் என்ற நிலைமாறி இயக்கங்களுக்காக மக்கள் என்ற நிலை உருவாகிறது

இந் நிலையை உருவாக்க முயலும் விடுதலை இயக்கங்களை மக்கள் இனங்காண வேண்டும். எமக்கு எந்த இயக்கம் விடுதலை வேண்டித் தரும் என்பதை மக்கள் அவர்களின் நடத்தையிலிருந்து அறிந்து கொள்ள வேண்டும்."

## பதவி உயர்வு பெற்ற அதிகாரி ஆலோசனை

# அதிகாரத்துக்கு அடிபணியாது, சேவை புரிதலே பெருமை

(சரசாலை)

"நிர்வாகத்துறையில் உள்ளவர்கள் அதிகாரத்தை தமது கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர அதிகாரம் அவர்களை தன்கையுள் வைத்துக்கொள்ள இடமளிக்கக் கூடாது. அப்படியாக நிர்வாகத்தை கொண்டு செல்வதன் மூலமே சிறந்த நிர்வாகியாக வரமுடியும்."

இவ்வாறு மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பதவி உயர்வுபெற்று மன்னார் மாவட்ட முகாமையாளராக செல்லும் திரு. வே ஸ்ரீஸ்கந்தவேலின் சேவைநலன் பாராட்டு விழாவில் மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் திரு. ச. சாந்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், "மக்களுக்காக சேவையில் உள்ளவர்கள் எப்பேர்ப்பட்ட இன்னல்கள் வந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது கடமையாற்றவேண்டும். அப்படிச் செய்வதே தற்போதைய காலகட்டத்தில் யாம் செய்யும் இறைதொண்டாகும். இதற்கு ஸ்ரீஸ்கந்தவேல் ஓர் உதாரணசீலர் ஆவார்" என்றார்.

மேற்படிச் சபையின் அபிவிருத்தி முகாமையாளர் திரு த. சிவநாதன் தனதுரையில், "திரு. ஸ்ரீஸ்கந்தவேல் படிப்படியாக உயர்வு பெறக் காரணம் அவரின் பணிவான குணமும் மக்களுக்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவையுமே ஆகும்" என்றார்.

மாங்குளம் வர்த்தகர்கள் சார்பில் திரு வி. கனகசபை மற்றும் திரு. கு. உதயகுமார் செல்வி. அ. அமிர்தகுண பாஞ்சாலி, செல்வி டி. ரஜினி ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

# கிளிநொச்சியில் வகுப்புகள்

(கிளிநொச்சி)

க. பொ. த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்த மாணவர்களுக்கான ஜீ. ஏ. கியூ வகுப்புகள் கிளிநொச்சி வசதிக்கட்டண ஆசிரியர் சங்கத்தினரால் கிளிநொச்சியில் நடாத்தப்படவுள்ளன தற்போதுள்ள பிரயாண இடையூறுகள் காரணமாக யாழ்ப்பாணம் சென்று படிப்பதற்கு சிரமப்படவேண்டியுள்ளதால் இவ்வேற்பாடு செய்யப்பட்டுள்ளது இது தொடர்பாக எதிர்வரும் 30-12-85 இற்கு முன்பாக கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி சங்கத்தினரால் கோரப்படுகிறது.

## சாரணீயத்தின் வளர்ச்சி

# 4 பாடசாலையில் தொடங்கி இன்று 4 மாவட்டமாக விரிவு

(வேலணை)

1916ம் ஆண்டில் நான்கு பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட சாரணீயம் இன்று யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகளைக்கொண்ட ஒரு மாவட்டமாகவும், உடுவில் காங்கேசன்துறை வட்டுக்கோட்டை இம் மூன்று தொகுதிகளும் ஒரு மாவட்டமாகவும் கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதியும் சேர்ந்து ஒரு மாவட்டமாகவும் சாவகச்சேரி கிளிநொச்சி ஆகியன சேர்ந்து ஒருமாவட்டமாகவும் ஆகநாலு மாவட்டமாக விரிவடைந்துள்ளது."

மேற்கண்டவாறு "சாரணீயம்" என்னும் பத்திரிகை தனது ஏழாவது ஆண்டு சிறப்பு இதழில் தெரிவித்துள்ளது அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: சாரணத் தலைவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் சாரணீயம் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளிலும் ஆரம்பித்து நடாத்துவதற்கு உதவியாகவுள்ளது. இடைக் காலங்களில் நிலைமை சீராக இல்லாத வகையில் குன்றியிருந்த போதிலும் தற்போது மிகவும் துரித கதியில் வளர்ச்சியடைந்து வருகிறது.

பயிற்சிக் குழுவினர்களின் முயற்சியினாலும், சாரணத்தலைவர்களின் ஒத்துழைப்பினாலும் குருளைச் சாரணர்களும், சாரணர்களும் பல தகுதிகாண் சின்னங்களைப் பெற்று முன்னேறக் கூடியதாகவுள்ளது அணித் தலைவர்களிற்கானபயிற்சிகளும் இவ்வாண்டும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# டிசம்பர் 17ல் திருவூஞ்சல்

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதாரம்பம் விசேட அபிஷேக, பூஜாராதனைகளுடன் வியாழக்கிழமை ஆரம்பமாகியது,

இருபது தினங்கள் தொடர்ந்து பெருங்கதை வாசிப்பு இடம் பெறும். அடுத்த மாதம் 17ம் திகதி விநாயகர் சஷ்டியன்று திருவூஞ்சல் நடைபெறும்.

### உதய சிந்தனை

சிந்திக்க விரும்பாதவன் வெறியன், சிந்திக்க முடியாதவன் மடையன், சிந்திக்கத் துணிச்சல் இல்லாதவன் அடிமை,

—வில்லியம் ட்ரமன்ட்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23336

இதய ஒலி

04-12-85 புதன்கிழமை (குரோதன கார்த்திகை-19)

# தமிழ் இளைஞர் தலைகளின் கணக்கெடுப்பா?

தமிழர் பிரதேசங்களை அரசாங்கம் தனது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் முதலாவது நடவடிக்கையை எடுத்தது.

''பாதுகாப்பு வலயம்'' என்று சில குறிப்பிட்ட பகுதிகளை அரசாங்கம் பிரகடனம் செய்ததே முதல் நடவடிக்கையாகும்

ஜனநாயக ஆட்சி அமைப்பில், நாகரிகமான பெயருடன் அராஜக ஆட்சியின் கொடூரக் கரங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் இவ்வாறு தான் பிரவேசம் செய்தன.

பின்னர் கண்காணிப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன.

கடலும், கடலுடன் சேர்ந்த பகுதிகளும் கண்காணிப்பு வலயத்துள் கொண்டு வரப்பட்டன.

பல்லாயிரக் கணக்கான மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது, தமது ஜீவனோபாயத்துக்கு வழியின்றி, அரைவயிறு, கால்வயிறு கஞ்சியுடன் தமது காலத்தைக் கழிக்க நேர்ந்தது.

மூன்றாவதாக தமிழ்ப் பகுதிகளில் வீதிப் போக்குவரத்து, திருத்த வேலைகளுக்கான கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

இரண்டு சில்லுச் சைக்கிளிலிருந்து சகல வாகனங்களுக்கும், வீட்டில் வைத்திருக்கவும், வீதிகளில் ஓட்டிச் செல்லவும் விசேஷ பர்மிட் முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த ஒரு வருட காலத்துக்குள் இவ்வாறான பல கெடுபிடி விதிகளை தமிழ் மக்கள் மேல் திணித்து, அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைத்துச் சின்னாபின்னமாக்கிய இன்றைய ஆட்சியினர், இப்போது மற்றுமொரு புதுத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஆலோசித்துள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகள் ஏற்கனவேயே தடைசெய்யப்பட்ட பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை அனைவருக்கும் தெரிந்திருக்காது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான காட்டுப்பகுதிகளும், அதனுடன் அண்டிய பகுதிகளுமே அண்மையில் தடைசெய்யப்பட்ட பகுதிகளாக பிரகடனப் படுத்தப்பட்டன.

தமிழ்ப் போராளிகளின் ரகஸிய முகாம்கள் காடுகளுக்குள் இருப்பதால் இந்தப் பிரகடனம் தேவைப்பட்டதாக ஆட்சித் தலைவர்கள் இதற்குக் காரணம் கூறினர்.

ஆனால் இப்போது, எல்லாவற்றுக்கும் மேலே போய், பயங்கரவாதப் பகுதிகளைப் பிரகடனம் செய்ய அரசு நடவடிக்கையெடுத்துள்ளது.

தமிழ்ப்போராளிகளைத் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், நாட்டைத் துண்டாடவிரும்பும் துரோகிகள் என்று சொல்லி வந்து இப்போது மாக்ஸிஸ பயங்கரவாதிகள் என அழைக்கின்றனர்.

இதுபோலவே, தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பாதுகாப்பு வலயம், கண்காணிப்புவலயம் தடைசெய்யப்பட்ட பகுதி என்று பிரகடனம் செய்யப்பட்டு வந்து, இப்போது பயங்கரவாதப்பகுதிகளாக பிரகடனம் செய்யப்படவுள்ளன

ஒரே வார்த்தையில் சொல்வதானால், வடக்கும் கிழக்கும் பயங்கரவாதப் பகுதிகள், இங்கு வசிப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற தனது முடிவை உலகுக்குப் பறைசாற்ற ஆட்சியாளர்கள் எண்ணியுள்ளனர் என்பதே எமது திட்டவட்டமான கருத்தாகும்.

இந்தப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு விசேஷ அடையாள அட்டைகளை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையை விட, புதிய விசேஷ அடையாள அட்டையும் இப்பகுதி மக்கள் வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதனையும் விளக்கமாகச் சொல்வதானால், தமிழ் மக்களுக்குப் பயங்கரவாதிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்க புதிய உருவத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இன்னுமொரு விதத்தில் இதனை அணுகினால், தமிழ்ப் பகுதிகளிலுள்ள தமிழ் இளைஞர்களின் தலைகளைக் கணக்கிட எடுக்கப்படும் ஒரு மறைமுக நடவடிக்கையாகவும் இதனை கருதலாம்.

எனவே அனைவரும் விழிப்புடன் இதனைக் கவனத்தில் எடுப்பது நல்லது.

O இன்று நாவலர் குருபூஜை

# நாவலர் காலத்திலும் அரச கெடுபிடி இருந்தது

அ. சபாபதிப்பிள்ளை
வட்டுக்கோட்டை

'ஈழத்தரசன் பாலசிங்கன் என்பவனுக்கு சோழராசா புத்திரி வயிற்றில் பிறந்த இராசசிங்கன் என்பவன் கண்டியிலிருந்து அரசாண்ட காலத்தில் மதுரையில் இருந்து வந்த யாழ்பாடிக்கு கொடுக்கப்பட்டது யாழ்ப்பாணம். இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால எழுதப்பட்ட பல வரலாற்றுக் கருத்துக்கள் செறிந்த இரத்தினச் சுருக்கமான வசனம், ஈழத் தமிழ் மக்களின் உன்னதச் சிறப்பை காட்டுகின்றது. ஆண்ட தமிழன் இன்று அனாதைகளாக அகதிகளாக, அடிமைகளாக, உரிமைகள் இழந்து நலிகிறார்கள்.

எந்தக் கோணத்திலிருந்து தமிழ் மொழிக்கு, சைவத்திற்கு, தமிழர்களுக்கு இடுக்கண் ஏற்பட்டாலும் சொதித்தெழுவார்கள் தமிழர்கள் இன்று முது பெருந்தலைவர்கள் எல்லாம் வாய் பொத்தி பயந்து ஓடி ஒதுங்கி ஒழிக்கிறார்கள்.

ஈழத்தில் தமிழ், சைவம் மெலிவுற்ற போது கொதித்தெழுந்தார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் கிறிஸ்தவ மிசனரி மாரைக்கொண்டு அடிமைக் கல்வி போதித்து பல ஆசை மோகங்கள் காட்டி அரசாங்க அடிமை உத்தியோகம் கொடுத்து சைவர்களை, பௌத்தர்களை மத மாற்றமும்செய்தார்கள். முதல் முதல் நாவலர் பெருமான் இங்கு கிளர்ந்தெழுந்தார். அவரைத்தொடர்ந்து பௌத்தர்களில்அநகாரிக்த தர்மபால, இஸ்லாமியர்களில் அப்புதுல் காதர் போன்றோர் நாவலர் பெருமானைப் பின்பற்றி பௌத்த பாடசாலைகளும் இஸ்லாமிய பாடசாலைகளும் நிறுவி ஓர் அளவிற்கு எங்கள் அடிமைப் போக்கை நீக்கிச் சுதந்திர வாழ்வு பெற உதவினார்கள். விழிப்புணர்ச்சி ஊட்டினார்கள்.

நாவலர் பெருமான் அரசாங்க உதவி இன்றி அக்காலத்தில் பள்ளிக்கூடங்கள் நிறுவி பிடி அரிசி தண்டியே தனது சேவையைச் செய்தார். மிசனரிமாரின் எதிர்ப்பும் அரசாங்கத்தின் செடுபிடியான சட்டங்களும் நாவலர் பணியைக் கடினமாக்கியது அவர் விடவில்லை இறுதிவரை அயராது உழைத்தார்

அக்காலத்தில் யாழ். அரசாங்க அதிகாரிகளின் கை ஆட்கள் லஞ்ச ஊழலில் ஈடுபட்டு பேதி நோய் பரவிய காலத்தில் நிவாரண நிதியையும் சூறையாடினார்கள் நாவலர் களரியூரில கஞ்சித் தொட்டி வைத்து தான தருமம் செய்தார். கச்சேரி ஊழல்களை அதிபருக்கு முறையிட்டார். பலன் இல்லை. மேல் அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பினார். மேல் அதிகாரிகள நேர் விசாரணைக்கு வந்தார்கள் மக்கள் பின் தண்டிக்கப்பட நேரிடும் என்று அஞ்சி சாட்சி சொல்லப்போகவில்லை. நாவலர் அஞ்சாது தனியாக நேரில் சென்று விளக்கங்கள் கொடுத்தார் நிர்வாகம்சிறிது திருந்திற்று; இவ்வாறு நாவலர் பெருமான் பல இன்னல்களைக் களைந்தார்.

சேர். பி. இராமநாதன் அவர்களை அக்காலத்தில் முதல் சட்ட நிருபண சபைக்கு அனுப்பிய பெருமை நாவலருக்கே உண்டு. நாவலர் பெருமானை சட்ட நிருபண சபையில் வீர இந்து சமய சீர்திருத்தவாதியென்று புகழாரம் சூட்டியிருக்கிறார். சாதியிலும் சமயமே மேல் என்று பெரியபுராண முன்னுரையில் அடித்துக் கூறியிருக்கிறார். சிதம்பரத்தில் தீட்சதர்மார் ஒரு வேள்வியில் ஆட்டுப்பலி கொடுக்க முனைந்த பொழுது கிளர்ச்சி செய்து மக்கள் உதவியுடன் அதைத் தடுத்தார். நாயன்மார் பல சாதியர் என்று அவர்கள் குருபூசையில் பங்குபற்ற மறுத்த பொழுது எதிர்த்து வெற்றியும் கண்டார்.

நாவலர் பெருமான் விவிலிய நூலை தமிழில் மொழி பெயர்த்தவர். அந்த நூலை நன்கு உணர்ந்தவர். எனவே அந்த நூலையோ ஏசுபிரானையோ எந்த இடத்திலும் கண்டிக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயரின் கை ஆடகளாகி மிசனரிமார் கடைப் பிடித்த கீழ்த்தரமான மதமாற்றங்களையும், போலிக் கிறிஸ்தவர்களுடைய சைவநிந்தனையையுமே அவர் கண்டித்தார். 'சைவதூஷண பரிகாரம்' என்ற பிரசுரம் போதிய சான்று. இதன் கருத்தே சைவ தூஷணைகளுக்குப் பரிகாரமே ஒழிய கிறிஸ்து மத கண்டனம் அல்ல. இவைகளை அறியாத சிலர் நாவலர் பெருமானை சாதி வெறியன் பிறமத கண்டனக்காரர் என்று விமர்சிக்க முனைகிறார். அவருடைய புரட்சி மனப்பான்மை விரிந்த நோக்கு துருவி ஆராய்ந்தால் நன்கு விளங்கும்

நாவலர் தாம் எழுதி வெளியிட்ட இரண்டாம் சைவ வினா விடையிலே ''புற சமயிகளுக்கு அவர் அவர் வழிபடும் தெய்வத்தில் அதிட்டித்து நின்று பலன் கொடுப்பவர் சிவபெருமானே'' என்று எழுதி இருக்கிறார். இது எவ்வளவு விரிந்த பரந்த நோக்கு!

பார்பூத்த புறச்சமய இருள்கள் நீங்கி, பரம் பூத்த சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்!

### இன்று ஐந்து இடங்களில்

# நாவலர் அஞ்சலி, சொற்பொழிவுகள், அன்னதானம், சமய கலை நிகழ்ச்சிகள்

நாவலர் பெருமானின் 107-வது குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இன்று, விசேஷ பூஜை, நாவலர் அஞ்சலி, சிறப்புச் சொற் பொழிவுகள், அன்னதானம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாழ். குளோபல் இயக்குநர் திரு. ம. சிவராசாவின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமிகளின் ஆசியுரை, அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்புரை ஆகியனவும் இங்கு இடம பெறும்.

நண்பகல் 11.15 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு சா விசுவலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துவார். திரு. க. நாகேஸ்வரனின் சிறப்புரை இங்கு இடம் பெறும்.

திருநெல்வேலி சைவமாணவர் அநாதை இல்லத்தில், உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. கு. கணநாதலிங்கத்தின் தொடக்கவுரையுடன் நாவலர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திரு. க சிவராமலிங்கம் இங்கு சிறப்புரையாற்றுவார்.

தமிழ் மகளிர் அவை புனர்வாழ்வு முகாமில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் வடபகுதி இ. போ. ச. தலைவர் திரு. எஸ் கனகரத்தினத்தின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும். கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜின் சிறப்புச் சொற் பொழிவு இங்கு இடம் பெறும்.

— 5-ம் பக்கம் பார்க்க

### நாவலனைப் போற்றிடுவோம்!

ஆறுமுக நாவலன் நல்லையிலே
அவரித் தான்! அழிவி னின்று
ஏறுமுகம் கொள்ள வைத்தான்
எழிற் தமிழைச் சைவத்தை!
வீறுமுகம் தொடர்ந்திடவே
வளமான பணி செய்தான்
கூறிடுவோம் அவன் பெருமை
போற்றிடுவோம் அவன் நாமம்!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

★ பாரத ஜனுதிபதி ஜெயில்சிங் இராணுவத்தினர் மத்தியில் உரை

# அண்டை நாடுகளில் நவீன ஆயுதங்கள் குவிப்பு

# முழுத்தயார் நிலை அவசியம்

(பட்னு)

"சில அண்டை நாடுகள் நவீன ஆயுதங்களைக் குவித்துவருகின்றன. இதனுல் எமது படை வீரர்கள் முழுத்தயார் நிலையில் இருக்கவேண்டும்." என்று பாரத ஜனுதிபதி திரு. ஜியானிஜெயில்சிங் முன் எச்சரிக்கையுடன் கூடிய கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். பட்னுவில் இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னுர்.



முன்னதாக பட்னுவில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் நாட்டின் ஒருமைப்பாடு குறித்து வலுவாக வற்புறுத்தனுர்-

"நாட்டிலிருந்து வறுமையையும், பிளவு சக்திகளையும் அடியோடு ஒழிக்க வேண்டும்" என்றுர் அவர்.

பட்னு சட்டசபை வளவில் முன்னுள் மத்திரியும், விடுதலை வீரருமான நாராயண் சின்ஹாவின் சிலையை அவர் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னுர்.

பாரதம் சுதந்திரம்அடைந்த காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனுதிபதி 'விடுதலை வீரர் வரலாற்றை முன்மாதிரியாகக் கொண்டு இளைஞர்கள் ஊக்கம் பெறவேண்டும்' என வற்புறுதினுர்.'

"தேசியஒற்றுமையும்,வகுப்பு ஒற்றுமையும் பாதுகாக்கப்படபோராடவேண்டும்." என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### சாலை விபத்து: 60 பேர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் நிகழ்ந்த சாலை விபத்து ஒன்றில் அறுபது பேர் கொல்லப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## பாரத-ஜாப் கூட்டுக்கமிட்டி ஜனவரியில் டில்லியில் கூடும்

(புதுடில்லி)

பாரதமும், ஜப்பானும் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் தமது உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைத்துள்ள கூட்டுக் கமிட்டி அடுத்த மாதம் புதுடில்லியில் கூடவுள்ளது.

மேற்படித் துறைகளில் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதே இக்கமிட்டி உருவாக்கலின் நோக்கம் என்பதும் பிரதமர் திரு ராஜீவ் காந்தி கடந்த வாரம் ஜப்பான் சென்றிருந்தபோது இக்கமிட்டி உருவானதென்பதும் குறிப்பிடத்தக்கவை.

## தமிழக முதல்வருடன் அமெரிக்க தூதர் 1 மணிநேர சம்பாஷணை

(சென்னை)

பாரதத்துக்கான அமெரிக்கத் தூதர் திரு. டீன் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து உரையாடியதாக நேற்றுக்காலை சென்னையில் இருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது

தமிழரசுத் தலைமைச் செயலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்ததாகவும் அத்தகவல் கூறியது.

எனினும் அவர்கள் சம்பாஷணை விவரங்கள்எதுவும் தெரிவிக்சப்படவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் பிரதானமாக இருவரும் விவாதித்தனர் என்று அறியப்படுகிறது.

## இம்மாதம் 7ம், 8ம் திகதிகளில்

## டாக்கா உச்சிமாநாடு; வெளியுறவு செயலர் முன்னதாக நகல் பிரகடனம் தயாரிப்பர்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் தெற்காசியப் பிராந்தியத் தலைவர்களின் உச்சிமாநாடு இம்மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் நடைபெறுவதற்கு முன்பாக அங்கத்துவ நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் நிலைக்கூட்டம் ஒன்று நடைபெறும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் இக்கூட்டத்தின் போது பிரகடன நகல் திட்டம் ஒன்றும் தயாராகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நாடுகளின் முதலாவது உச்சிமாநாடு எதிர்வரும் சனிக்கிழமை டாக்காவில் ஆரம்பமாகும் போது பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகளும் ஆராயப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை மேற்படி நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் கூடி ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இம்மாநாட்டில் பாரதம், பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகள் கலந்து கொள்கின்றன.

### பிரதமர் ராஜீவ் பங்கேற்பு

(புதுடில்லி)

மறைந்த பாரத ஜனுதிபதி ராஜேந்திரபிரசாத்நினைவுகூரல் தொடர்பான நிகழ்ச்சிகளில் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நேற்று கலந்து கொண்டார்.

## பாரத தொழிற்றுறை மகளிர் குழு-பாக் பிரதமர் சந்திப்பு

(கராச்சி)

பாரதத்தைச் சேர்ந்த தொழில் முனைவு மகளிர் குழு ஒன்று பாகிஸ்தான் பிரதம மந்திரி திரு. ஜுனெஸ்கோவை இஸ்லாமாபாத்தில் சந்தித்து உரையாடியுள்ளது.

இருதரப்பு வர்த்தகதொழில் உறவுகள் குறித்து அப்போது விவாதிக்கப்பட்டன.

## ஸிம்பாப்வே-ரஷ்யப் பிரதமர் சர்வதேச விடயம் ஆராய்வு

(மாஸ்கோ)

ஸிம்பாப்வே பிரதம மந்திரி திரு றெருபேட் முகாபே மாஸ்கோவில் சோவியத் பிரதம மந்திரியைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விடயங்கள் என்பன அப்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸிம்பாப்வே பிரதம மந்திரி சோவியத் யூனியனுக்கு மேற்கொண்டுள்ள முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

இருதலைவர்களும் பிரதானமாக தென்னுபிரிக்க நிலைமை குறித்தே விவாதித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அணிசேரா நாடுகளின் அடுத்த தலைமைப் பொறுப்பை ஏற்கப்போகும் நாடு ஸிம்பாப்வே என்பதால் இச்சந்திப்பு மிகமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருக அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.

## எதிர்க்கட்சித் தலைவர் படுகொலை

## பிலிப்பைன்ஸ் அரசு தீர்ப்பு: அமெரிக்கா குறை தெரிவிப்பு

(வாஷிங்டன்)

பிலிப்பைன்ஸின் எதிர்க்கட்சித் தலைவர் அக்கியுனே படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவபடைத்தலைவர் மற்றும் உயரதிகாரிகளை பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்திருப்பது குறித்து அமெரிக்கா குறை கூறியுள்ளது.

இப்படுகொலைக்குப் பின்னணியில் இராணுவத் தலைவர்கள் இருந்தனர் என்று முன்னைய நீதி விசாரணையில் கண்டறியப் பட்டிருந்தது, எனவே இபபோதைய தீர்ப்பு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க வெளியுறவு இலாகா பிலிப்பைன்ஸ்மீதான தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் சர்வதேச ரீதியில் பேரதிர்ச்சியையும், பரபரப்பையும் தோற்றுவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### நாவலர் அஞ்சலி....

- 4ம் பக்கத்தொடர்

மாலை 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில்நிகழ்ச்சிகள் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி கே. சிவஞானத்தின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும். தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ சிவகுருநாதன் நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்குவார்.

இங்கு இடம் பெறும் நாவலர் கவிதாஞ்சலி நிகழ்ச்சியில் திருவாளர்கள் சொக்கன், சோ. பத்மநாதன் கல்வயல் குமாரசாமி ஆகியோர் பங்குபற்றுவார்கள். கலைமணி எஸ். வடிவேலு குழுவினரின் 'வள்ளி திருமணம' வில்லுப்பாட்டும் நடைபெறும்.

நாவலர் மணிமண்டபத்தில் காலையில் பெரியபுராண படனம் இடம்பெறும்.

## பிந்திய செய்தி

## ஜனதிபதி தேர்தலில் திருமதி அக்கினேவும் போட்டியிட முடிவு

(மணிலா)

ஜனுதிபதிதேர்தலில் தானும் போட்டியிடப் போவதாகக் கொலையுண்ட பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் அக்கினேவின் மனைவி அறிவித்துள்ளார்.

இதேவேளை, பெப்ரவரி 7-ம் திகதி ஜனுதிபதி, உப-ஜனுதிபதி தேர்தல்களை நடத்துவதற்கான சட்டமூலத்தில் ஜனுதிபதி திரு. மார்க்கோஸ் கையெழுத்திட்டுள்ளார்.

இந்நிலையை எதிர்த்து வழக்கறிஞர்கள் சங்கமும், பன்னிரண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேப வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### சிற்பக் கலைஞர் மரணம்

(புதுடில்லி)

பாரதத்தின் பிரபல சிற்பக்கலை வல்லுநர் டாக்டர் ஷெனுய் தனது எண்பத்தொன்பதாவது வயதில் காலமானுர்.

அவர் பல தேசிய விருதுகளையும், மாநில விருதுகளையும் தன் திறனுற்றலுக்காகப் பெற்றுள்ளார்.

## வெளிநாட்டு பயணம்

- டென் மார்க் (Denmark) பயணம் - 20-12-1985
- இத்தாலி (Italy) பயணம் - 20-12-1985
- கனடா (Canada) பயணம் - 28-12-1985
- பிஜி (Fiji) பயணம் - 22-12-1985

விசா எடுத்து - எமது அநுபவம்வாய்ந்த முகவர் உங்களை அழைத்துச் செல்வார்.

இன்னும் சில ஆசனங்கள் மட்டுமே உண்டு.

பாஸ்போட்டுடன் வந்து நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

C. E. C.,
"முனீஸ்வர கபே" மேல்மாடி,
சுன்னுகம்.

ஈழமுரசு

## உரபசளை ஆலையில் குளோரின் கசிவு 200 பேர் மயக்கமடைந்தனர்

களனியா சபுகஸ்கந்தையிலுள்ள உரப் பசளைத் தொழிற்சாலையில் நேற்றுத் திடீரென குளோரின் கசிவு ஏற்பட்டதால் அயற் பகுதிகளில் குடியிருக்கும் சுமார் இருநூறு பேர் திடீரென மயக்கம் போட்டு வீழ்ந்தனர். குளோரின் மணமும், அதன் எரிவு சக்தியும் சேர்ந்து பலரை வீடுகளை விட்டுவெளியேறச் செய்தது. பதினொரு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குளோரின் கசிவு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

1986ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில்:

# யாழ். நவீனசந்தை மூன்றும் கட்ட வேலைகளுக்கு முப்பது லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது

(இ. பாரதி)

**1986ஆம் ஆண்டிற்காக யாழ். மாநகர சபையால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி தெருக்கள், கால்வாய்கள், வடிகால்களை அமைப்பதற்காகவே கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக எண்பத்து மூன்று இலட்சம் ரூபா புதிய ஆண்டில் செலவிடப்படவுள்ளது.**

புதிய ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் யாழ். மாநகர சபையால் நேற்று வெளியிடப்பட்டது. இதன் விபரங்கள் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக யாழ். மாநகர சபையின் சிறும்பிடி லேன் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

புதிய நிதி ஆண்டிற்கு பொதுப் பகுதி வருமானமாக 2,52,15,930 ரூபாவும் மின் பகுதி வருமானமாக 3,02,29,000 ரூபாவும் கிடைக்கும். இதன்படி மாநகர சபைக்கு 5,54,44,930 ரூபா மொத்த வருமானமாக கிடைக்கின்றது.

புதிய ஆண்டிற்கான மொத்தச் செலவினம் 5,53,93,140 ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி 51,790 ரூபா மாநகரசபைக்கு மேலதிக வருமானமாகக் கிடைக்கின்றது.

புதிய ஆண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களில், தெருக்கள், கால்வாய்கள், வடிகால்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு அடுத்ததாக நவீன சந்தையின் மூன்றும் கட்டடத்தை அமைப்பதற்காகவே கூடுதலான தொகை ஒதுக்கியுள்ளது. இதற்காக முப்பது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை சென்ற ஆண்டே ஒதுக்கப்பட்ட போதிலும் வேலைகள் நடைபெறாததால் மீளவும் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய காரியாலய கட்டடம் அமைப்பதற்காக பத்து இலட்சம் ரூபாவும், சிறிய தண்ணீர் விநியோகத் திட்டத்திற்காக பதினாறு இலட்சம் ரூபாவும், மாநகரசபை அச்சகம் அமைப்பதற்காக 7,50,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள நிலை காரணமாக விடுதிகள், போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வரி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் முப்பது இலட்சம் ரூபா வரையில் வருமானம் கொடுத்த தமாசா வரியும் இப்பொழுது பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை இடம் மாற்றுமாறு பிரஜைகள் குழு கோரிக்கை

(கிளிநொச்சி)

சில முக்கிய விடயங்கள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் கிளிநொச்சி அரசாங்க அதிபரைச் சந்தித்தனர். கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை மக்களின் பாதுகாப்பு கருதி வேறு இடத்துக்கு மாற்றுவது குறித்து அரசாங்க அதிபரிடம் பிரஜைகள் குழுவினர் எடுத்துக் கூறினர்.

இதுசம்பந்தமாக கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்ட சகலருக்கும் பிரஜைகள் குழுவினால் விளக்கமான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள், போக்குவரத்துவிடயத்தில் தற்போதுள்ள பிரச்சினைகளை தவிர்த்தல், தற்போது இயங்க முடியாமலிருக்கும் தொழில் ஸ்தாபனங்களை இயங்கச்செய்தல் போன்ற பல விடயங்கள் பற்றி இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

### யுத்தநிறுத்த...

1ம் பக்கத் தொடர்

விலக்கியதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் ஓமானில் நடத்திய சந்திப்பு பற்றிய விபரங்களை திரு. பண்டாரி கூட்டணித் தலைவர்களிடம் எடுத்துரைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டணியினர் வெளியுறவுக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதியைச் சந்தித்து இனப் பிரச்சினை நிலை குறித்து விவாதித்தனர்.

கூட்டணித் தலைவர்கள் தலைநகரில் ஒரு சில நாட்கள் தங்கியிருப்பர் என்றும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று பாராட்டு விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு. ச. கனகரத்தினத்தின் சேவைநலன் பாராட்டு விழா இன்று புதன்கிழமை காலை பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

### ராணுவ....

1ம் பக்கத் தொடர்

துவதில் அர்த்தமில்லை என்றார்.

இலங்கை அரசுகளுடனான ஒவ்வொரு சந்திப்பின் போதும் தமிழர் அமைப்புகள் தோல்வியையே தழுவிக்கொண்டுள்ளன என்றும் சொன்னார் அவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றித் தமக்கு ஆட்சேபமேதுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

### ஒலிபெருக்கி...

வாகனத்தில் இருந்து வன்னிப் பகுதியில் கொல்லப்பட்ட தோழர் றேகனுக்கு அனுதாப அஞ்சலிகளும், உரைகளும் ஒலிபரப்பப்பட்டன.

சுமார் பதினைந்து நிமிடநேர அஞ்சலி உரைகள் ஆண், பெண் குரல்களில் நிகழ்த்தப்பட்டதுடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

### பளை....

- 1ம் பக்கத் தொடர்

கொண்டிருந்ததாகவும், அப்பொழுது மினி பஸ்ஸிலும், இ. போ. ச. பஸ்ஸிலும் வந்திறங்கிய படையினர் தம்மை அழைத்ததாகவும் தாம்பயந்து ஓடியபோது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தனது தம்பி வீடு ஒன்றிற்குள்ளால் பாய்ந்து ஓடிவிட்டதாகவும் தெரிவித்த அவர், தனக்கு கையிலும், காலிலும் தொடையிலும் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் படையினர் அப் பகுதியில் நின்று பலரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றதாகவும் அவர் சொன்னார்.

### தோட்டத்....

- 1ம் பக்கத் தொடர்

குத் தெரிவித்தார்.

மாலையில் தொழிலாளர் தமது வேலைகளுக்குச் செல்வார்கள். ஆனால் அனைவருக்கும் முழுநாள் சம்பளம் வழங்க தோட்டநிர்வாகம் மறுக்குமானால் தோட்டத்தொழிலாளர்கள் தமது வேலைகளைப் பகிஷ்கரிப்பர் எனவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

முதற்கட்டப் போராட்டம் சித்திரைப் புத்தாண்டுடன் முடிவடைந்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி இ. தொ. கா. தீர்மானிக்கும்.

அதேவேளையில் 1986ம் ஆண்டை நாட்டில் அமைதி ஏற்படுத்தும் சமாதான ஆண்டாகவும் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியுள்ளது.

## திருத்தொண்டர்களாக எழுவர் பட்டம் பெற்றனர்

(வண்ணார்பண்ணை)

கொழும்புத்துறை புனித பிரான்ஸிசு சவேரியார் குருத்துவக் கல்லூரி நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது.

குருத்துவத்தின் முதல் நிலையான திருத்தொண்டர் பட்டமளிப்பு விழாவே கல்லூரியை சிறப்பித்து வைத்தது. இப் பட்டமளிப்பு விழாவை யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நிறைவேற்றிவைத்தார்.

அருட்சகோதரன் செபஸ்தி நீக்கிலஸ் (நாவாந்துறை), அருட்சகோதரன் இராசேந்திரம் ஸ்டாலின் (உரும்பராய்), அருட்சகோதரன் ஜெரூட் சவிரிமுத்து (யாழ்ப்பாணம்) அருட்சகோதரன் நீக்கிலஸ் குரூஸ் (முள்ளிக்குளம்), அருட்சகோதரன் கிறிஸ்ரி செல்வராசா (மிருசுவில்), அருட்சகோதரன் ரூபன் மரியாம்பிள்ளை (சில்லாலை) அருட்சகோதரன் தொம்மையப்பு யேசுதாசன் (இரணைப்பாலை) ஆகிய ஏழுபேருமே திருத்தொண்டர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

## தென்னிந்திய திருச்சபை அகதிகளுக்கு அன்பளிப்பு

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தால் நேற்று அகதிகளுக்கு உணவு மற்றும் துணி வகைகள் அடங்கிய எண்பத்தி நான்கு பார்சல்கள் வழங்கப்பட்டன. இவற்றை சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு ரீ. வைத்திலிங்கம் பெற்று அகதிகளுக்கு வழங்கினார்.

இந்தப் பார்சல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சேலை, ஒரு சாரம் இரு சட்டைத் துணி, ஒரு சேட் துணி, ஒரு நெஸ்பிறே, இருநூறு கிறாம் தேயிலை என்பன இருந்தன. இதே போன்ற பார்சல்கள் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு நாற்பதும், உடுவில் அரசாங்க அதிபர் பிரிவில் எண்பதும், பருத்தித்துறைக்கு ஐநூற்று நாற்பதும் வழங்கப்படவுள்ளன. இவை திருமலை, வவுனியா, மட்டுநகர் பகுதி அகதிகளுக்குக் கொடுக்கப்படும்.

## இன்று ஒளி விழா

(அரியாலை)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய கிறிஸ்தவ மன்றத்தின் வருடாந்த ஒளி விழா இன்று நடைபெறும். இம்மன்றம் மறைக்கல்விப் பரீட்சைக்கு மாணவர்களை நெறிப்படுத்தும் தொண்டினையும் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## அச்சுவேலி இருளில் மூழ்கியது

அச்சுவேலியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த சட்ட விரோத மின்பாவனை காரணமாக அப் பகுதிக்கான பிரதான மின்தாங்கி எரிந்துவிட்டதால் கடந்த சில தினங்களாக அச்சுவேலிப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக அடுத்த வாரம் நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இப்பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதிப் பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. என். இராஜேந்திரன் கவலை தெரிவித்தார்.

### கூட்டுறவுப்...

1ம் பக்கத் தொடர்

கருத்து என்ன? இனப் பிரச்சினையை எப்படி தீர்க்கலாம்? இலங்கை எங்கிருந்து ஆயுதங்களை வாங்குகிறது? என்ற கேள்விகளே அதிகமாக இவர்களிடம் கேட்கப்பட்டதாம்.

சாவகச்சேரியில்

## துணிகர திருட்டு

(சாவகச்சேரி)

பட்டப்பகலில், பிரதானவீதியிலுள்ள வீடு ஒன்றில் துணிகர திருட்டு ஒன்று நடைபெற்றுள்ளது. சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான ரூபா பெறுமதியுள்ள பொருட்களே திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் சிவாநந்தன் என்பவருடைய வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. கமரா, வானொலிப்பெட்டி, கசெட்செட்டுகள், போலிநெக்கிளஸ் ஆகிய பொருட்களே திருடப்பட்டுள்ளன.

## இவ்வருடம் மாணவர் குறைவு

(கிளிநொச்சி)

எதிர்வரும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள் இம்முறை கிளிநொச்சிமாவட்டத்தில் சென்ற வருடத்தை விட குறைவாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்ற வருடம் 16 பரீட்சை நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இவ்வருடம் 13 நிலையங்களே இருக்கும்.

இம்முறை இப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த மாணவர்களின் தொகை குறைவானதாகவிருப்பதாலேயே நிலையங்கள் குறைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 4-12-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23386